
ISRAEL - OCTOBER 7 ATTACK
இஸ்ரயேல்
அக்டோபர் 7 தாக்குதல்
7.10.23

# இஸ்ரயேல்

## அக்டோபர் 7 தாக்குதல்

*Discourse:*

***Bro. Ric Cunningham***

**Tamil Translated by :**

***www.foodfornewcreature.com***

# முன்னுரை

*சத்திய வெளிச்சத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களைத் தவிர, பூமி முழுவதுமே இருள் சூழ்ந்துள்ளது.*

*நாம் பார்க்கப்போகிற பாடமானது ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாகிய மாம்சீக இஸ்ரயேலுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. எனவே, நாம் பார்க்கப்போகிற பெரும்பாலான காரியங்கள் கிறிஸ்தவர்களின் அனுபவத்தைக் குறித்து அல்லாமல், மாறாக ஆபிரகாமின் மாம்சீக சந்ததியின் அனுபவத்தைக் குறித்தும், அது சம்பந்தமாக தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பது குறித்தும் அதிகமாக பார்க்கவிருக்கிறோம். இப்படியாக இந்தப் பாடமானது, இந்தக் கொடூரமான தற்போதைய நிகழ்வுகளில் என்ன நடக்கிறது என்பது பற்றி சில நுண்ணறிவுகளை நமக்கு வழங்கும் என்று நம்புகிறோம்.*

*இந்த விஷயங்களில் சிலவற்றில், நிச்சயமாக, நம்மில் பலருக்கு, பார்க்கும் கோணங்கள் வேறுபடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.*

# பாடம்

*இந்தப் பாடத்தில், குறிப்பாக, அக்டோபர் 7, 2023 அன்று துவங்கி இப்போது வரை நடந்துவருகிற ஹமாசுடனான தற்போதைய போர் சம்பந்தமான தற்போதைய நிகழ்வுகளின் மீது அதிக கவனம் செலுத்தப்போகிறோம்.*

*ஆம், சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பு, ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரயேல் தேசத்திற்குள் உட்புகுந்து, பலரையும் கொன்றுவிட்டு, மேற்கொண்டு 240 பேரைப் பிணை கைதிகளாகப் பிடித்துச்சென்றனர். இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா தரப்பினருக்கும் ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்பதை இங்கே பதிவுசெய்ய விரும்புகிறோம். உண்மையான தீர்வு வேண்டுமெனில், சமாதானமான இராஜ்யம் வெளிப்படும் வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும்; அப்போதுதான், பூமியின் அனைத்து சண்டையிடும் பிரிவுகளையும் இரும்புக் கோலால் அடக்கிடும் வல்லமையோடு மகிமையில் கிறிஸ்து வீற்றிருப்பார், அந்த வல்லமையானது சமாதானமான இராஜ்யத்தை மேன்மேலும் விரிந்து வளர்ந்தோங்கச் செய்திடும்.*

*இப்போதுகூட, இஸ்ரயேலுக்கு எதிரான உலக நாடுகளின் அழுத்தத்தின் காரணமாக, அது தான் விரும்பும் அளவுக்கு நன்மையைச் செய்ய முடியாதபடிக்குத் தடைப்-பண்ணப்படுகிறது.*

*அப்படியானால், யூதர்கள் மீதான வெறுப்போடுகூட, இஸ்ரயேலுக்கு எதிராக உலகம் ஏன் அழுத்தம் கொடுக்க வேண்டும்? என்ற கேள்வி நமக்குள் எழலாம். பதில்: சாத்தான் ஆபிரகாமின் மாம்சீக சந்ததிக்கு எதிராக இருப்பது தான் இதற்கான முக்கிய காரணமாகும். ஏன்? ஏனென்றால், முற்பிதாக்களோடும், மீண்டும் கூட்டிச்சேர்க்கப்பட்டு, மறுசீரமைக்கப்பட்ட இஸ்ரயேலோடும் கூட எருசலேம் சமாதான இராஜ்யத்தின் தலைமையகமாக திகழும் என்பதையும், அவர்கள் வழியாக அந்த ஆசீர்வாதங்கள் முழு மனுக்குலத்திற்கும் சென்றடையும்*

*என்பதையும், வேத வாக்கியத்திலிருந்து சாத்தான் அறிவான். எனவே, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியைத் தடுக்கவும், ஆபிரகாமின் மாம்சீக சந்ததி தேசத்தில் தங்கவிடாமல் தடுக்கவும் சாத்தானும் சரிக்குசரியாக நின்று போரிட்டு வருகிறான். ஏனென்றால், அவர்கள் தேசத்தில் தங்கினால், எருசலேமைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தால், அது அவனுடைய அழிவுக்கும் அவனுடைய பூமிக்குரிய ஏற்பாடுகளின் அழிவுக்கும் நேராக வழிவகுத்திடும். எனவே, ஹமாஸ் மற்றும் அதன் கொடூரமான தாக்குதலுக்குப் பின்னால், பெரும்பாலும் சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் செல்வாக்குதான் காணப்படுகின்றது.*

*அக்டோபர் 27, 2023 அன்று ஹமாஸ் நடத்திய கொடூரமான தாக்குதலானது பாலஸ்தீனியர்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதற்கான போர் அல்ல, மாறாக, இது இஸ்ரயேல் மற்றும் யூத ஜனங்களை அழித்தொழிப்பதற்கான போராகும்.*

================

https://www.adl.org/resources/blog/hamas-its-own-words *எனும் இணையதளமானது, யூதருக்கு எதிரான விரோதத்தைத் தங்களால் இயன்றளவுக்குத் தடுப்பதற்காக, 1913 ல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போதுவரை இயங்கிவருகிற ADL எனும் அமைப்பின் இணையதளமாகும்.*

*அதில் ஜனவரி 01, 2024 அன்று, "Hamas In Its Own Words" ("ஹமாஸ் தானே சொன்ன வார்த்தைகள்") எனும் தலைப்பில் ஒரு பதிவை வெளியிட்டு, அதில் ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பேசிய வார்த்தைகள் சிலவற்றைத் தொகுத்து வழங்கியிருந்தனர், அதின் ஒரு பகுதியை வாசகர் பயன்பாட்டிற்காக இங்கே மொழிபெயர்த்துப் பதிவிடுகிறோம்:*

## ஹமாஸ் தானே சொன்ன வார்த்தைகள்:

*அக்டோபர் 7 அன்று, ஹமாஸ் இஸ்ரயேலைத் தாக்கியது, சுமார் 1,200 ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும், சிசுக்ளையும் கொன்று குவித்தது – இது ஹோலோகாஸ்டு என்கிற யூத இனப்படுகொலைக்குப் பிறகு, யூதர்களுக்கு நடந்த மிகப்பெரிய மற்றும் மிகக் கொடூரமான படுகொலையாகும். ஹமாஸ் பயங்கரவாதிகள் வேண்டுமென்றே 200 வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட பொதுமக்களின் கொலை, பாலியல் வன்கொடுமை மற்றும் சித்திரவதைகளைப் பதிவு செய்தனர், அத்துடன் குறைந்தபட்சம் 240 பிணை கைதிகளை அவர்களுடன் கூட காசாவிற்குக் கடத்திச் சென்றனர்.*

*இந்தப் பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, ஒரு தவறான பொய்ப் பிரச்சாரமும் செய்யப்பட்டது. அக்டோபர் 7 படுகொலைக்கு பதில் தாக்குதல் செய்வதைத் தவிர இஸ்ரயேலுக்கு வேறு வழியில்லை என்பதை அறிந்த ஹமாஸ், பாலஸ்தீன குடிமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி, அதனால் ஏற்படும் பொதுமக்களின் உயிரழப்புகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் எனும் நோக்கில், காசாவின் வீடுகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு அடியில் உள்ள சுரங்கப்பாதை வலையமைப்பிற்குள் பதுங்கிகொண்டனர்.*

*இது இஸ்ரயேலுக்கு இரண்டே இரண்டு தேர்வுகளை (options) விட்டுச்சென்றது – ஒன்று பதிலுக்கு எதுவும் செய்யாமல் இருப்பது, அதை அவர்களால் செய்ய முடியாது, மற்றொன்று, அவர்கள் கைதிகளைத் மீட்டுக்கொண்டு வர முயற்சி செய்வது. சரி மீட்டுக்கொண்டு வரலாம் என முடிவெடுத்து, ஹமாசைத் தாக்கச் செல்லும்போது, பொதுமக்களைத் தாண்டித்தான் ஹமாசை ஒழிக்க முடியும், பிணை கைதிகளை விடுவிக்கவும் முடியும் என்பதுபோன்ற சூழலொன்றை ஹமாஸ் உருவாக்கி வைத்துள்ளது. ஹமாஸ் தலைவர்களே ஒப்புக்கொள்வது போல, இந்த இரண்டு*

*வழிகளுமே ஹமாஸ், இஸ்ரயேலுக்கு எதிரான பயங்கரவாதம் மற்றும் தூண்டிவிடும் தாக்குதலுக்கான ஒரு யுக்திசார்ந்த வெற்றியாகவே பார்க்கிறது. அதன் தலையாய குறிக்கோளே இஸ்ரயேலை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதுதான்.*

...

...

*பின்வருபவை ஹமாஸ் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் வெறுக்கத்தக்க சொல்லாடல்களின் எடுத்துக்காட்டுகளும், அவர்களின் சாசனத்திலிருந்து (charter) எடுக்கப்பட்ட சில மேற்கோள்களுமாகும்:*

## ஹமாஸ் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள்:

*ஹமாஸ் அதிகாரிகளின் அறிக்கைகள் அனைத்துமே, இஸ்ரயேலை அழித்து, உலகெங்கிலும் உள்ள யூதரையும் இஸ்ரயேலரையும் கொல்ல வேண்டும் என்கிற பயங்கரவாத அமைப்பின் உறுதிப்பாட்டை நன்கு தெளிவுபடுத்துகின்றன.*

- *(தாக்குதலுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு,) 2020ல், ஹமாசின் அரசியல் பணியகத்தின் தலைவராகிய இஸ்மாயில் ஹனியே **(Ismail Haniyeh)** பின்வருமாறு தெரிவித்தார்: போர்நிறுத்த ஒப்பந்தங்களை ஹமாஸ் நிராகரிப்பதாகவும், இதன் மூலம், "காசா சிங்கப்பூர் போல மாறும்" என்றும், நதிதுவக்கி சமுத்திரம் வரைக்கும் (கவனித்தீர்களா!), பாலஸ்தீனா தேசம் பரந்துவிரியும் வரையில் இஸ்ரயேலுடன் போர்ப்புரிந்து கொண்டே இருப்போம் என்றும் விளக்கினார்: "பணம் அல்லது திட்டங்களுக்கு ஈடாக, பாலஸ்தீனத்தையும் எங்களது ஆயுதங்களையும் எங்களால் விட்டுத்தர இயலாது. நாங்கள் எதிர்ப்பைக் கைவிட மாட்டோம்... இஸ்ரயேலை அங்கீகரிக்க மாட்டோம்.*



*பாலஸ்தீனம் [யோர்தான்] நதிதுவக்கி [மத்திய தரைக்கடல்] சமுத்திரம் வரைக்கும் பரந்துவிரிந்திருக்க வேண்டும்."* ஆம் இது 2020ல் சொல்லப்பட்ட வார்த்தைகளாகும்.

*(2006 ஆண்டு துவக்கி இப்போது வரை, ஹமாஸ் இஸ்ரயேலுக்கு எதிராக நான்கு கடுமையான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. அதில் அக்டோபர் 7 தாக்குதல் என்பது மிகவும் சமீபத்தியதும், மிகவும் கொடூரமானதுமாகும்.)*

- *மேலும், இந்தத் தாக்குதலுக்கு சில நாட்களுக்குப் பிறகு, அக்டோபர் 12, 2023 அன்று அஹ்மத் அப்த் அல்-ஹாதி என்பவர் (**Ahmad Abd Al-Hadi** – லெபனானில் உள்ள ஹமாஸ் பிரதிநிதி) ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில், 'இஸ்ரேல்தான் அமைதிக்கான பேச்சுவார்த்தை நடத்தும்' என்றும், 'போர்நிறுத்தம் என்பது ஹமாசின் ஒட்டுமொத்த திட்டத்தின் ஒரு பகுதி' என்றும் ஹமாசின் நோக்கங்களைக் குறித்து பேசியிருந்தார். மேலும் போர்நிறுத்தத்திற்குப் பிறகு, அடுத்த கட்டமாக ஹமாஸ் என்ன திட்டமிட்டுள்ளது என்பதைச் சொல்ல தனக்கு சுதந்திரம் இல்லை என்றும் கூறினார். "(இஸ்ரயேல் மற்றும் அரபு நாடுகளுக்கிடையேயான உறவுகளை) இயல்பாக்குவதற்கான செயல்முறைக்கு விழுந்த ஓர் அடியாகிய" அக்டோபர் 7 தாக்குதலானது தனது நோக்கத்தை சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.*

*('இஸ்ரயேல் நான்கு இசுலாமிய நாடுகளுடன் பொருளாதார உறவுகளை வைத்துக்கொள்வதற்காக போடப்பட்ட ஆபிரகாம் ஒப்பந்தமானது (Abraham Accords), சவூதி அரேபியாவுக்கும் நீட்டிக்கப்படவிருந்தது, ஆனால், இஸ்ரயேல் மற்றும் பிற அரபு அல்லது முஸ்லீம் நாடுகளுக்கு இடையே மேற்கொண்டு எந்தவொரு முக்கியமான சமாதான உடன்படிக்கையும் ஏற்படாதவாறு, அதற்கு ஊறுவிளைவிப்பதற்காகத்தான், ஹமாஸ்*



*இந்தத் தற்போதைய அக்டோபர் 7 போரினைக் கட்டவிழ்த்துள்ளது' என்று பலரும் கருதுகிறார்கள் – இந்தக் கருத்தோடு மேற்சொன்ன அறிக்கையும் ஒத்துப்போவதாக தெரிகிறது.)*

- *இப்போது ஹமாஸ் உறுப்பினராகிய காஸி ஹமாத்து **(Ghazi Hamad)** என்பவர், அக்டோபர் 24, 2023 அன்று லெபனானின் எல்பிசி தொலைக்காட்சியில் பின்வருமாறு கூறியிருந்தார்: "இஸ்ரயேல் என்ற தேசத்திற்கு எங்கள் நிலத்தில் இடமில்லை." மேலும், **அக்டோபர் 7 தாக்குதல்களை, "இஸ்ரயேல் அழிக்கப்படும் வரை மீண்டும் மீண்டும் செய்வோம்"** என்றும் சபதம் செய்தார்; மேலும், இஸ்ரயேலை அழிக்கும் ஹமாசின் கொள்கைசார் நோக்கதிற்காக, (காஸா குடிமக்களைக் குறிக்கும் வண்ணமாக) "தியாகிகளைத் தியாகம் செய்ய" ("sacrifice martyrs") விருப்பமும் தெரிவித்தார்.*




*இஸ்ரயேலிலும், காசாவிலும் நடைபெறுகிற பொதுமக்களின் உயிரிழப்புகள் பற்றி பயங்கரவாத அமைப்பிற்கு எந்தக் கவலையும் இல்லை என்பதை ஹமாஸ் அதிகாரிகளின் அறிக்கைகள் தெளிவாக தெரிவிக்கின்றன.*

- *ஹமாசின் மூத்த தலைவர் காலித் மஷால் என்பவர் (Khaled Mashal) 2023ம் ஆண்டு அக்டோபர் 19ம் தேதி அன்று, மனிதக் கேடயங்களைப் பயன்படுத்தும் ஹமாசின் திட்டத்தால் ஏற்படுகிற தற்போதைய காஸா குடிமக்களின் உயிரிழப்பு இன்றியமையாத (essential) ஒன்று என தான் கருதுவதாகக் கூறினார்: **"தியாகங்கள் இல்லாமல் எந்த தேசமும் விடுதலை பெறாது... எல்லாப் போர்களிலும், சில பொதுமக்கள் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். அவர்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல."** என்றும் தெரிவித்தார்.*

***ஹமாஸ் சாசனம் (The Hamas Charter):***

*....*

*....*

*'பாலஸ்தீனம் என்பது ஓர் இசுலாமிய நிலம்... இப்படியாக காரியம் இருப்பதால், பாலஸ்தீனத்தை விடுதலையடைய செய்வது எல்லா இடத்திலுமுள்ள ஒவ்வொரு முஸ்லீமுடைய தனிப்பட்ட கடமையாகும்' என்று தெளிவாகக் கூறுகிறது. – ஹமாஸ் சாசனம், Article 13.*

*மேலும், பாலஸ்தீன பிரச்சினைக்கு, ஜிஹாத் எனும் புனிதப் போரைத் தவிர வேறு தீர்வு இல்லை என்று மேற்கொண்டு ஹமாஸ் சாசனம், Article 13 கூறுகிறது.*

================

*பிரச்சனை என்னவென்றால், சமாதானத்தை அடைவதற்காக அல்லாமல், மாறாக இஸ்ரயேலை அழிப்பதற்காகவே ஹமாஸ் இந்தப் போரை நடத்தி வருகிறது. இது அவர்களின் சாசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது – இந்த சாசனம் என்பது அவர்கள் யார், அவர்களின் குறிக்கோள்கள் என்ன எனும் தகவலடங்கிய ஆவணமாகும். இஸ்ரயேலை நிர்மூலமாக்கும் முயற்சியில், பாலஸ்தீன ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும் தியாகிகளாக பலியிடுகிறார்கள் – அவ்வாறாகத்தான் அவர்கள் பொது மக்களின் மரணத்தைப் பார்க்கிறார்கள் (இதைப் பற்றி சற்று அப்புறமாக பார்க்கலாம்).*

*ஹமாஸ் என்பது 2006ல் பாலஸ்தீனியர்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலஸ்தீன அரசாங்கமாகும். அக்டோபர் எம் தேதிக்குப் பிறகும்கூட ஹமாசுக்கு அமோக ஆதரவு இருப்பதாக, தற்போதைய கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது.*

*பாலஸ்தீன குழந்தைகள், இஸ்ரயேலை – சீயோனிய அம்சத்தை (the Zionist entity) – வெறுக்கச் சொல்லி வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் ஹமாஸ் பயங்கரவாதிகளை*

*தங்களுடைய மாவீரர்களாகவும், சுதந்திரப் போராட்ட வீரர்களாகவும் கருதுகிறார்கள். அவர்கள் முழுமையாக குருடாக்கப்பட்டுள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, மனுக்குலத்தின் நீண்ட மோசமான சரித்திரத்தில் காணப்பட்ட நாஜிக்கள், கெமர் ரூஜ் (Khmer Rouge) மற்றும் இன்னும் பல இயக்கங்களைப் போன்று இவர்களும் இருக்கிறார்கள் – இவர்களைத்தான் நாம் இராஜ்யத்தில் கையாளப்படும் வழக்குகள் (Kingdom Cases) என்று கூறுகிறோம். இந்தக் கண் குருடாக்கப்பட்டுள்ள ஜனங்கள் தவறுகளை அடையாளம் கண்டுகொள்ள செய்வதும், அவர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளதை அடையாளம் காணச் செய்வதும், அந்தத் தவறான சிந்தனையிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்து, சத்தியம் மற்றும் நீதி எனும் சரியான சிந்தனையைச் சிந்திக்க வைக்க உதவுவதுமே, மத்தியஸ்த ஆளுகையாகிய சமாதான இராஜ்யத்தின் பணிகளில் ஒன்றாக இருக்கும்.*

### ***செய்தி அறிக்கைகளில் பிரச்சனையுள்ளது:***

*இன்றைய காலக்கட்டத்தில், செய்தி அறிக்கையிடுவதிலும் கோளாறு செய்கிறார்கள். பாலஸ்தீனியருடைய மரணங்கள் மற்றும் உயிரிழப்புகள் பற்றிய செய்தியைச் சொல்லும்போது, அதில் ஹமாஸ் போராளிகள் எத்தனை பேர் மரித்தனர், பொதுமக்களில் எத்தனை பேர் மரித்தனர் என்பதையெல்லாம் அவர்கள் வேறுபடுத்திக் காட்டுவதில்லை. சொல்லப்போனால், கொல்லப்பட்ட ஹமாஸ் போராட்டக்காரர்களின் எண்ணிக்கை குறித்த துல்லியமான அல்லது நம்பகமான புள்ளிவிவரங்களை வைத்திருப்பது தற்போது சாத்தியமற்றதாக இருக்கின்றது. உண்மையில் ஹமாஸ் இன்றளவும் அநுதினமும் புது புது ஆட்களைச் சேர்த்து வருவதாகக் கருதப்படுகிறது. இன்றைய நிலவரப்படி, 10,000க்கும் மேற்பட்ட ஹமாஸ் போராட்டக்காரர்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.*

*இப்போதுள்ள செய்தி ஊடகங்கள் தற்போதைய நிகழ்வுகளுக்கான எந்த வரலாற்றுப் பின்னணியையும் வழங்குவதில்லை, இதனிமித்தமாக உண்மையில் இதற்கான*

காரணங்கள் என்ன, எதிர்வினைகள் என்ன என்பது பற்றிய பொதுமக்களின் பார்வை சிதைக்கப்படுகின்றது.




*ஜூலை 24, 2006அன்று US News & World Report இதழிலிருந்து சிலவற்றை இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறோம்:*

*"செப்டம்பர் 2006ல், இஸ்ரயேல், காசா பகுதியின் ஒவ்வொரு கடைசி அங்குலத்திலிருந்தும் ஒட்டுமொத்தமாக வெளியேறியது. இஸ்ரயேலர்கள் அனைத்து இராணுவ தளங்களையும் தகர்த்தனர், தங்களுடைய அனைத்து குடியிருப்புகளையும் அழித்தார்கள், சுமார் 4,000 பேர் வேலை செய்யக்கூடிய நன்கு இயங்கிக்கொண்டிருந்த பசுமை குடில்களை மூடினார்கள், குடியேறியிருந்த 7,500 இஸ்ரயேலர்களை வெளியேற்றினார்கள் – இவை அனைத்திற்கும் பெரும் பணம் செலவழிக்கப்பட்டது, அரசியல் ரீதியிலும் நஷ்டம் ஏற்பட்டது. பிரதம மந்திரி அரியேல் ஷரோன் (Ariel Sharon) என்பவர் இன்னும் ஒரு படி மேலே சென்று, இஸ்ரயேலை காசாவில் இருந்து பிரிக்கும் எல்லை கோடுகளை, 'சர்வதேச எல்லை' என்று அறிவித்தார்– இது காசாவை முதல் சுதந்திர பாலஸ்தீனப் பிரதேசமாக மாற்றியது.*

*ஓர் எதிர்கால சுதந்திர தேசத்திற்கான ஒரு முன்மாதிரியாக, பாலஸ்தீனியர்கள் தங்களுக்குக் கிடைத்த இந்தச் சுதந்திரத்தின் மூலம் தங்களால் என்ன சாதிக்க முடியும் என்பதை உலகத்திற்குக் காட்டுவார்கள் என்று அனைவரும் நம்பினார்கள். ஆனால் அந்தோ! நடந்ததோ வேறு. அதன் பிறகு ஒரு நாள் கூட அமைதி அங்கே நிலவவில்லை. இஸ்ரயேல் வெளியேறிய அந்த நாளிலேயே தாக்குதல் நடத்தும் ஒரு முன்மாதிரியைக் பாலஸ்தீனர்கள் கடைப்பிடிக்கலாயினர். பாலஸ்தீன போராட்டக்காரர்கள் என்ன செய்தார்கள் என்றால், ககூசு எக்கு முன்பிருந்தது போன்ற சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட*

*இஸ்ரயேலில் வாழ்ந்த அப்பாவி பொதுமக்களைக் குறிவைத்து, காசா எல்லையின் மறுபக்கத்தில் இருந்துகொண்டு, இஸ்ரயேலிய நகரங்கள்மீது ஏவுகணைகளை வீசினார்கள்."*

சகோதர சகோதரிகளே, இத்தனையெல்லாம் நடந்த பிறகும், அதாவது தற்போதைய போர் முடிந்த பிறகு, பாலஸ்தீனர்கள் உண்மையான ஜனநாயகத்தைத் தழுவி, இஸ்ரயேலை அழித்தொழிக்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, சமாதானமாக இருக்க எண்ணி, காஸா பகுதியை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று நினைப்பது என்பது யதார்த்தத்தில் சாத்தியமே இல்லாத ஒரு காரியமாகும். இது சமாதான இராஜ்யத்திற்குக் காத்திருக்க வேண்டும்.

இஸ்ரயேல் இராணுவத்தால் பதில் தாக்குதல் செய்ய முடியாத ஒரு சூழலை, ஹமாஸ் உள்நோக்கத்துடனே உருவாக்கி வைத்துள்ளது. பொதுமக்களுக்குக் கீழாக ஹமாஸ் போராட்டக்காரர்கள் உள்நோக்கத்துடன் மறைந்துகொள்கிறார்கள்; இதனால், இஸ்ரயேல் பொதுமக்களைக் கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. சிறார் பராமரிப்பு கூடங்கள் (daycares), பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் மசூதிகள் உட்பட, ஏராளமான பொதுமக்கள் இருக்கும் கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்கு அடியில் பரந்துவிரிந்து கிடக்கும் சுரங்கப்பாதை அமைப்புகளைப் பற்றி அனைவருக்கும் தெரியும்.

இஸ்ரயேலுக்கு எதிரான உண்மையான போரில் வெற்றி பெற முடியாது என்பது ஹமாஸ் அமைப்பிற்கும் தெரியும். ஆம்! அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்கள் பொதுஜனத்தின் அனுதாபத்தைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்பிவிடும் "மென்மையான போரை" ("soft war") வென்றெடுக்க வேண்டும் என்றும், "ஆக்ஸிஸ் ஆப் ரெசிஸ்டன்ஸ்" ("Axis of Resistance") எனும் இராணுவக் கூட்டணியிலிருக்கும் மற்ற தேசத்தாரையும் இஸ்ரயேலைத் தாக்குவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர்கள் முனைப்போடு இருக்கிறார்கள்.

## அரபு தேசங்களும் குற்றத்திற்கு உடந்தையாக உள்ளன:

எந்த அரபு தேசமும் பாலஸ்தீனர்களை உள்ளே அழைத்துக்கொள்ள தயாராக இல்லை. உண்மையில், அவர்கள் யோர்தான் மற்றும் எகிப்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இந்நாள் வரையிலும், எகிப்திற்குள் எந்தப் பாலஸ்தீனியர்களும் வராமல் தடைசெய்யும் வகையில், காஸா பகுதியோடுள்ள தனது எல்லையை எகிப்து மூடி வைத்துள்ளது என்பதை நாம் அனைவருமே அறிவோம்.

## தி ஆக்ஸிஸ் ஆப் ரெசிஸ்டன்ஸ் (THE AXIS OF RESISTANCE):

*(The Axis of Resistance என்பது ஈரான், சிரியா மற்றும் பிற குழுக்களுக்கு இடையிலான அதிகாரப்பூர்வமற்ற இராணுவக் கூட்டணியைக் குறிக்கும் ஓர் அரசியல் பதமாகும்.)*

அதிலுள்ள சில உறுப்பினர்கள்: ஈரான், லெபனானில் ஹிஸ்புல்லா, காஸாவில் ஹமாஸ், எகிப்து உட்பட முஸ்லிம் நட்பு தேசங்கள், இசுலாமிய ஜிஹாத், ஹூத்திகள் (Houthi), ஈராக்கை அடிப்படையாக வைத்து இயங்கி வரும் இசுலாமிய எதிர்ப்பு இயக்கம் (Iraqi based Islamic resistance) மற்றும் சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள ஷியா போராட்டக்காரர்கள்.

1979ல் இசுலாமியப் புரட்சிக் காவலர் படைப்பிரிவினர் (Islamic Revolutionary Guard Corps) ஈரானைக் கைப்பற்றியதில் இருந்தே, பாலஸ்தீனத்திலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும், ஐக்கிய அமெரிக்காவையும் மேற்கத்திய சக்தியையும் அதின் செல்வாக்கையும் – குறிப்பாக சீயோனிய இஸ்ரயேல் தேசத்தையும் – விரட்டுவதே அவர்களின் குறிக்கோளாக இருந்துவருகிறது. பாலஸ்தீனத்தை அவர்கள் வெறும் தெற்கு சிரியாவாகவே பார்க்கிறார்கள்.



இப்போது இஸ்ரயேலும் ஐக்கிய அமெரிக்காவும், சில அரபு நாடுகளுடனான உறவில் முன்னேறி வருகின்றன. சில சக்திவாய்ந்த அரபு நாடுகள் ஈரானிய சக்திக்கும் நோக்கங்களுக்கும் அஞ்சுகின்றன, சவூதி அரேபியா, ஜோர்டான், எகிப்து, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்றவை. இஸ்ரயேல் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், சூடான் மற்றும் மொராக்கோ இடையே பொருளாதார ஒத்துழைப்புக்கான



ஆபிரகாம் ஒப்பந்தங்கள் *(Abraham Accords) 2020ல்* கையெழுத்திடப்பட்டன. இது அக்டோபர் 7ம் தேதி தாக்குதலுக்கு சற்று முன்பு மேலும் விரிவடையவிருந்தது; ஆனால், ஏற்கனவே கூறியது போல, இஸ்ரயேல் மற்றும் அரபு அல்லது முஸ்லீம் நாடுகளுக்கு இடையே எந்தவொரு பொருளாதார சமாதான ஒப்பந்தங்களும் மேற்கொண்டு முன்னேற்றமடையாதபடிக்கு தடைசெய்ய வேண்டும் என்பதற்காகவே இந்தத் தாக்குதலை நேரம்பார்த்து நடத்தி உள்ளனர் என்று பலர் கருதுகின்றனர்.

இப்போது “மென்மையான போர்” பற்றி பார்க்கலாம் – இது உலகளாவிய பொதுமக்களின் அனுதாபத்தைச் சம்பாதிப்பதைப் பற்றியதாகும்.

ஹமாஸ் போராட்டக்காரர்களுக்குத் தாங்கள் தோல்வியடைய போகிறோம் என்பது தெரியும். அவர்கள் தங்களையும், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அடங்கிய பொதுமக்களையும், மாபெரும் நோக்கத்திற்கான தியாகிகளாகக் *(martyrs)* கருதுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், போர் நிறுத்தம் என்பது தங்களை சாதகமாக இடம் மாற்றிக்கொள்வதற்கும், புதிய ஆயுதங்களை வாங்கி குவிப்பதற்குமான ஒரு சாக்கு மட்டுமே.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஹமாஸ் செய்ய வேண்டியதெல்லாம் பிணை கைதிகளை விடுவிப்பது மட்டும்தான். அதுபோதும், ஆனால், உண்மையில், ஹமாசுக்கு இந்தப் போரை முழுவதுமாக நிறுத்த விருப்பமில்லை. உலகளாவிய பொதுமக்களின் அனுதாபத்தை தங்களுக்குச் சாதகமாக வென்றெடுப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். குறுகிய எட்டு மாதங்களிலேயே இஸ்ரயேலுக்கு எதிராக, உலக ஜனத்தின் பெரும்பாலானோரைத் திருப்பிவிடுமளவுக்கு, பெரும் தாக்கத்தை அவர்கள் ஏற்படுத்தி உள்ளனர் என்பதை நம்மால் எளிதில் கண்டுணர முடிகின்றது.

சிரியாவில், ஈரானின் இசுலாமியப் புரட்சிக் காவலர் படைப்பிரிவினருடைய (Islamic Revolutionary Guard Corps) உயர்மட்ட ஜெனரல்களை இஸ்ரயேல் கொன்றது. ஈரான் பதிலடியாக இஸ்ரயேலை நோக்கி 300க்கும் மேற்பட்ட எறிகணைகளை அனுப்பியது. இஸ்ரயேலின் தற்காப்பு சக்தியான அயர்ன் டோமானது (Iron Dome), அமெரிக்கா, பிரித்தானிய மற்றும் ஜோர்டானிய உதவிகளுடன் சேர்ந்து, கொஞ்ச எறிகணைகளை தவிர மற்ற அனைத்தையும் தரையிறங்குவதற்கு முன்பாக தாக்கி அழித்தது. இன்னும் இஸ்ரயேல் மிகவும் மிதமான பதிலடியைத்தான் கொடுத்திருக்கிறது. ஆனால் முதன்முறையாக ஈரான், இஸ்ரயேலின் தடுப்பு உபாயங்கள் பழுதே இல்லாத ஒன்றல்ல என்பதை நிரூபித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் அனைத்திலும், இஸ்ரயேல் எத்தனை நேரம் மற்றும் எப்படியெல்லாம் பதில் தாக்குதல் செய்கிறது என்பதை இஸ்ரயேலின் எதிரிகள் நன்கு கூர்ந்து கவனித்து வருகிறார்கள், இதன்வாயிலாக இஸ்ரயேலின் தற்காப்பு கட்டமைப்பில் உள்ள பலவீனங்கள் என்னென்ன, அவற்றை எப்படித் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையெல்லாம் அவர்கள் கண்டறிந்துவருகிறார்கள் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா இஸ்ரயேல் மீது ஏவுகணைகளையும் எறிகணைகளையும் (missiles) ஏவியது, இஸ்ரேல் பதிலடி கொடுத்தது.

ஹூத்திகள் *(The Houthis)* எனும் யெமன் நாட்டில் இயங்கும் இசுலாமிய ஆயுதக் குழுவானது ஈரானியர் வழங்கிய அதிநவீன ஹைப்பர்சோனிக் துல்லியமான வழிகாட்டுதலுள்ள ஏவுகணையை, கடந்த வாரம், ஏமனில் இருந்து இஸ்ரயேலின் ஈலாட் *(Eilat)* பகுதியை நோக்கி வீசினது. அதன் பெயர் 'பாலஸ்தீனம்' *('the Palestine')* ஆகும்.

இதுவே இஸ்ரயேலைச் சுற்றியுள்ள தி ஆக்ஸிஸ் ஆப் ரெசிஸ்டன்ஸ் ஆகும்.

## செயற்கை நுண்ணறிவு போர்முறை *(A.I. WARFARE)* பயன்படுத்தப்படுகிறது:

இஸ்ரயேல் *A.I. Warfare* – செயற்கை நுண்ணறிவு போர்முறையைப் பயன்படுத்துகிறது. அவர்களின் இலக்கினைச் சரியாக குறிவைத்து தாக்குவதற்காகவும், ஹமாஸ் போராட்டக்காரர்களும், தலைவர்களும் எங்கிருக்கிறார்கள் என்பதைச் சரியாக காண்பதற்காகவும், முகத்தை அடையாளம் காணும் *(facial recognition)* தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து-கிறார்கள்; அப்படி அடையாளம் கண்ட பின்னரே தாக்குதல் செய்யும்படிக்கு உத்தரவிடுகிறார்கள். அதனால்தான், பொதுமக்கள் மத்தியில் இந்த ஹமாஸ் தலைவர்கள் மறைந்திருந்த இடத்தில் இஸ்ரயேல் தாக்குதல் செய்தபோது, போரின் தொடக்கத்தில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஆனால்,



இஸ்ரயேல் தனது சொந்த வீரர்கள் மரணமடையாமல் பாதுகாப்பதற்காகவே அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

நாம் இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது, அது ஒரு பயங்கரமான விஷயமாகவே இருக்கின்றது. ஆனால் என்ன செய்து, இது தற்போதைய தீமையான உலகமாக இருக்கின்றதே. அந்தோ பரிதாபம்! இதுவும் இஸ்ரயேலுக்கு "கேட்ச் 22 / Catch 22" நிலையாக இருக்கின்றது, அதாவது தீர்விருந்தும் அதை செய்ய முடியாதபடிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டு, சிக்கித்தவிக்கும் நிலையாக இருக்கின்றது. உதாரணமாக, குறிப்பிட்ட இராணுவ தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாக காஸாவில் உள்ள பொதுமக்களுக்கு, இஸ்ரயேல் இராணுவம், பலமுறை முன்னெச்சரிக்கை கொடுத்துள்ளது, ஆனால் இது ஹமாசுக்கும் செய்திகொடுப்பது போலாகிவிடுகின்றது.

## பிணை கைதிகள்:

பிணை கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்ட பலர் மரித்துவிட்டனர் என்பதை நாம் அறிவோம். அவர்களையும், உயர்மட்ட ஹமாஸ் தலைவர்களைப் பாதுகாப்பதற்கான கேடயங்களாகப் பயன்படுத்தியுள்ளனர். இதுவரை விடுதலை பண்ணப்பட்ட சிலர், தாங்கள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டதாகப் புகாரளித்துள்ளனர்.

இயன்றவரையிலான பிணை கைதிகளைப் பிடித்துச் செல்வதற்காகத்தான் அக்டோபர் ஏ தாக்குதலே நடத்தப்பட்டது. உண்மையில், அவர்கள் தாங்கள் நினைத்ததைக்காட்டிலும் அதிகமானதைச் சாதித்துவிட்டார்கள். இஸ்ரயேல் சிறைகளிலிருந்து ஹமாஸ் பயங்கரவாதிகளை விடுவிப்பதற்காக, இந்தப் பிணை கைதிகளைப் பயன்படுத்துவதும் இந்தச் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆனால் அவர்கள் முன்யோசனையோடு திட்டமிட்டு, உள்நோக்கத்துடனே இந்தக் கொடூரமான தாக்குதல்களின் கோரமான அட்டூழியங்கள் அனைத்தையும் நிகழ்த்தியுள்ளனர், இதற்குக் கண்டிப்பாக இஸ்ரயேல் நியாயமான கோபத்துடன் பதிலடி கொடுப்பார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள், அதைத்தான் இஸ்ரயேலும்

*செய்தது. ஆனால் பாவம், அது பொதுமக்களின் அனுதாபத்தைத் தன்பக்கமும், காஸா மக்கள் பக்கமும் கொண்டு வரும் ஹமாசின் "மென்மையான போருக்கு" சாதகமாக மாறி வருகிறது.*

*ஜூன் 8, 2024 அன்று நான்கு பிணை கைதிகள் IDFன் சிறப்புபடை நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டதைக் குறித்து நாம் அறிவோம். அவர்கள் இரண்டு வெவ்வேறு கட்டிடங்களில் இருந்தனர், இது பட்டப்பகலில் நடந்த மிகவும் ஆபத்தான மீட்பு நடவடிக்கையாகும்; IDF படைகள் தொடர்ந்து கடுமையான துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட வேண்டியிருந்தது. இப்படியாக, அவர்கள் நான்கு பேரைக் காப்பாற்றினர், ஆனால், துரதிர்ஷ்டவசமாக இஸ்ரேலிய தளபதிகளில் (Israeli commanders) ஒருவர் கொல்லப்பட்டார். 1 இஸ்ரயேலனின் உயிர் கொடுக்கப்பட்டு, 4 இஸ்ரயேலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. ஆனால் அதில் 200க்கும் அதிகமான பாலஸ்தீனியரும் கொல்லப்பட்டனர். ஹமாஸ் போராட்டக்காரர்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள், பொதுமக்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது போன்ற எண்ணிக்கையை அவர்கள் உங்களுக்குச் சொல்ல மாட்டார்கள். ஆனால் சற்று யோசித்துப் பாருங்கள், ஹமாஸ் பிணை கைதிகளை விடுதலைபண்ணியிருந்தால், இவர்கள் யாரும் இறந்திருக்க வேண்டியதில்லையே. ஆனால், முன்பு பார்த்தபடி, ஹமாசுக்கு இது முக்கியமில்லை, அவர்களின் நோக்கமே வேறாகும். தற்போது, சுமார் 120 பிணை கைதிகள் எஞ்சியிருப்பதாகக் கருதப்படுகின்றது.*

## அரசியல்:

*இஸ்ரயேல் அரசியலைப் பொறுத்தவரை, அது மிகுந்த சிக்கலான நிலையில் காணப்படுகின்றது – அக்டோபர் 7 தாக்குதலுக்கு முன்பே, அங்கு மோசமான, குழப்பமான மற்றும் பிளவுபட்ட அரசியல் நிலைமைதான் காணப்பட்டது. இப்போதும் அது தொடர்கதையாக இருக்கின்றது.*

*இஸ்ரயேல் சம்பந்தமாக அமெரிக்காவின் நிலைப்-பாட்டைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் தொடர்ந்து*

*இஸ்ரயேலை ஆதரிக்கிறது, ஆனால் அதுவும் ஒரு சிக்கலான நிலைமையில்தான் காணப்படுகின்றது. ஒரு நாள் ஒரு மாதிரியும், இன்னொரு நாள் வேறு மாதிரியும் என, சில சமயம் எதிர்ப்பும், சில சமயம் ஆதரவும் தெரிவிக்கப்படுகின்றது. பொதுமக்களின் கருத்து மற்றும் பல்வேறு அரசியல்வாதிகளின் தற்போதைய மனநிலை மற்றும் கருத்துக்கணிப்பாளர்களின் தற்போதைய மனநிலை போன்றவை என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பவைகளைப் பொறுத்து, இஸ்ரயேல் அல்லது அவரது ஆதரவாளர்களுக்கு பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. மாறிமாறி போராட்டங்கள் தொடர்கின்றன.*

*இப்படியே இறுதியில் இஸ்ரயேல் தனித்து நிற்கும் நிலை வரும், ஆனால் (சர்வவல்லமையுள்ள) தேவன் அவள் பக்கம் (உற்ற துணையாக) நிற்பார் என்பது நமக்குத் தெரியும்.*

## ***இஸ்ரயேல் சம்பந்தமான வேதாகம அடிப்படைச் சத்தியங்கள்:***

*தேவன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் ஒரு தேசத்தை வாக்களித்திருந்தார். இதுகுறித்து,* ***ஆதியாகமம் 13:14 - 17*** *மற்றும்* ***ஆதியாகமம் 15:18*** *ஆகிய வசனப்பகுதிகளில் வாசிக்கின்றோம்.* ***ஆதியாகமம் 15:18 – "அந்நாளில் கர்த்தர் ஆபிராமோடு உடன்படிக்கை செய்து, எகிப்து நதி தொடங்கி யூப்ரடீஸ் நதி வரையுள்ள இந்த தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" என்றார்.*** *தேவன் மீண்டும் மீண்டுமாக, ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கிற்கும், ஆபிரகாமின் பேரனாகிய யாக்கோபுக்கும் இந்த உடன்படிக்கை வாக்குத்தத்தத்தை வலியுறுத்தினார். இது அவரது அடிமைப்பெண்ணாகிய ஆகார் மூலம் பெற்றெடுத்த குமாரனாகிய இஸ்மயேலுக்குரிய வாக்குத்தத்தம் அல்ல.*

*பின்னர், மோசேயின் மூலமாக, இஸ்ரயேல் தேசம் நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்டது. பூமியின் எல்லா தேசங்களுக்குள்ளும் அவர்களை மாத்திரம், தேவன் ஓர் உடன்படிக்கையின் மூலமாக அங்கீகரித்தார்.*

***ஆமோஸ் 3:2 – “பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்.”***

*ஆம் சகோதர சகோதரிகளே, அவர்கள் இன்னும் இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை கீழாகவே உள்ளனர். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல், அது ஒரு நாள் இல்லாமல் போகும் என்று நமக்கு கூறுகிறார்:* ***“புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது” – எபிரேயர் 8:13***

*இயேசுவை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் இன்னும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் காணப்பட்டதாக அப். பவுல் எழுதுகிறார்:* ***“யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்” – 1 கொரிந்தியர் 9:20***

*இஸ்ரயேலருக்கு அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, அவர்கள் ஆசீர்வாதங்களையும் தண்டனையையும் பெறுவார்கள் என்று தேவன் ஏற்கனவே முன்னறிவித்திருந்தார்:*

***“நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன். தேசம் அவர்களாலே விடப்பட்டு, பாழாய்க்கிடக்கிறதினாலே தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்டளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள். அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை***

***அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர். அவர்களுடைய தேவனாயிருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படச்செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவுகூருவேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார். கர்த்தர் தமக்கும் இஸ்ரயேல் சந்ததியாருக்கும் நடுவே இருக்கும்படி மோசேயைக்கொண்டு, சீனாய்மலையின்மேல் கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே." – லேவியராகமம் 26:42-46.***

*சுவிசேஷ யுகமானது புதிய உடன்படிக்கைக்கு தேவையான தலையும் சரீரமுமாகிய மத்தியஸ்தரை ஆயத்தப்படுத்தும் தன்னுடைய வேலை முடித்த பிறகு, வருங்காலத்தில் இஸ்ரயேலரின் புதிய உடன்படிக்கை செயல்பாட்டில் இருக்கும் போது, நியாயப்பிரமாண உடன்படிக்கை முற்றிலுமாக கடந்துபோய் இருக்கும். ஆனால், அந்தப் புதிய உடன்படிக்கையோ ஒருபோதும் ஒழிந்து போகாது:*

***"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும்,***

***எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." – எரேமியா 31:31-34.***

***"அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு, எனக்குப்பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து," – எரேமியா 32:40.***

*மாம்சீக இஸ்ரயேலுடன் பண்ணப்படும் அந்தப் புதிய உடன்படிக்கையை எஞ்சிய மனுக்குலத்திற்கும் தேவன் நீட்டிப்பார்:* ***"ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். அப்பொழுது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் நீ சேர்த்துக்கொள்ளுகையில், உன் வழிகளை நினைத்து நாணுவாய்; அவர்களை நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன்; உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை. உன்னோடே என் உடன்படிக்கையைப்பண்ணி ஏற்படுத்துவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிவாய்." - எசேக்கியேல் 16:60-62***

*பலி மற்றும் கிருபையினாலான கிறிஸ்தவ உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேலும் இல்லை, மனுக்குலமும் இல்லை, ஒருபோதும் அதன்கீழாக வரவும் மாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். இயேசுவின் சீஷர்களாக இருப்பதற்கான இந்தச் சுவிசேஷ யுகத்து பரம அழைப்பினை, யூதர்களிலும், புறஜாதிகளிலும் யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் மாத்திரமே இந்தக் கிருபையின் உடன்படிக்கையின் கீழ் வருவார்கள். இந்தக் கிறிஸ்தவ உடன்படிக்கையானது புதிய சிருஷ்டியை வளர்ச்சியடைய செய்வதற்கு மட்டுமே ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆகவே, 1,44,000 + 1 நிறைவடைந்தவுடன் இந்த வாய்ப்பு முடிந்துவிடும்.*

*மேற்கூறிய கருத்துகளுக்குத் தேவையான சில அறுவடை செய்தி மேற்கோள்கள் பின்வருமாறு:*

- ***ரீப்ரிண்ட் 4901***
- ***ரீப்ரிண்ட் 5164***
- ***கேள்வி புத்தகம் 432***
- ***கேள்வி புத்தகம் 176***

*இஸ்ரயேலின் இரட்டிப்பு என்பது அவர்கள் தேவ தயவிற்குள் இருந்த காலத்தையும், அதனைத் தொடர்ந்து தேவ தயவிலிருந்து தள்ளிவிடப்பட்ட காலத்தையும் குறிக்கிறது, அதனைத் தொடர்ந்து அவர்கள் மீண்டும் தேவ தயவிற்குள் வரவழைக்கப்படுவதற்கும், மறுசீரமைக்கப்படுவதற்குமான காலம் வருகின்றது. உண்மையுள்ள ஆபிரகாமுக்கு வாக்களித்தபடி, அவர்கள் தேவனுடைய உடன்படிக்கை செய்யப்பட்ட ஜனங்களாக இருப்பதால்தான் இவை அனைத்தும் நடந்தது மற்றும் நடக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். முற்பிதாவாகிய யாக்கோபு மரித்த வருடமாகிய கி.மு. 1813 முதல் மேசியாவின் வருடமாகிய கி.பி. 13 வரை, அவர்களது 1845 வருஷ தயவின் காலமானது கடந்துபோனது; அதனைத் தொடர்ந்து, அதற்குச் சரிசமமான 1845 வருஷ தயவற்ற சிதறடிக்கப்பட்ட காலமானது கடந்து போனது – இது கி.பி. 1848ல் முடிவடைந்தது. அன்று துவக்கி,* ***ஏசாயா 40:1, 2*** *தீர்க்கதரிசன வசனங்கள் நடைமுறையில் உள்ளது:* *"****என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் (****தேவன் அவர்களை என் ஜனம் என்று அழைக்கிறார்****); எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, (அதற்கு நியமிக்கப்பட்ட காலம்) முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும் (****ஆம், அந்த 1845 ஆண்டுகால தயவற்ற காலம்,*



*அந்த இரட்டிப்பு, இப்போது முடிந்துவிட்டது),* ***அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்."***

*(ஹமாஸ் முதலானவர்கள் உரிமைக்கோரும் அந்த நிலம்) உண்மையில் யாருடைய நிலம்? என்று கேட்டால், பின்வரும் வசனங்கள் அதற்கான பதிலை நமக்கு அளிக்கின்றன:*

***யோயேல் 2:18 - "அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார்."***

***யோயேல் 3:2 - "நான் சகல ஜாதியாரையும் கூட்டி யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்-போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரயேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும்."***

*அப்படியானால், அவர்கள் யாருடைய ஜனம்? பின்வரும் வசனங்கள் அதற்கான பதிலை அளிக்கின்றன:*

***யோயேல் 3:3 – "அவர்கள் என் ஜனத்தின்பேரில் சீட்டுப்போட்டு, ஆண்குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம் பண்ணும்படி, பெண்குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்ததினிமித்தமும், அங்கே அவர்களோடு வழக்காடுவேன்."***

***யோயேல் 2:27 – "நான் இஸ்ரயேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை."***

*ஆம், அவர்களின் உலகப்பிரகாரமான ஆவியினாலும், தேவன் மீது விசுவாசம் இல்லாத காரணத்தினாலும் தேசத்திற்கு இன்னும் கடினமான தண்டனையொன்று வரவுள்ளது – இது* ***எரேமியா 30****ல் காட்டப்பட்டுள்ளபடி, அவர்கள் தங்கள் ஒரே நாயகராகிய தேவனை நம்பாமல், மேற்கத்திய சக்திகளாகிய*

*தங்கள் நேசர்களை நம்புவதன் மூலமாக நன்கு நிரூபிக்கப்படுகின்றது.*

*நாம் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, ஒருகாலத்தில் இஸ்ரயேல் வசம் Temple Mount இருந்தது, ஆனால் அதை அவர்கள் கைநழுவவிட்டனர், அவர்கள் வசம் சீனாய் பகுதி இருந்தது, அதையும் அவர்கள் நழுவவிட்டனர். 2022ல் நடந்த ஒரு கருத்துக்கணிப்பின்படி, இஸ்ரயேலில் உள்ள யூத மக்களில்* ***45%*** *பேர் தங்களை மதச்சார்பற்றவர்களாக (secular) அடையாளப்படுத்துகிறார்கள். எனவே, இன்றைய இஸ்ரயேல் தேசம், எதிர்காலத்தில் ஆசீர்வதிக்கும் தேசமாகப் பயன்படுத்துவதற்காக தேவன் எதிர்பார்க்கின்ற நிலையில் தற்போது காணப்படுவதில்லை.* ***ஓசியா 2*** *ல் காட்டப்பட்டுள்ளபடி, அது இன்னுமே கர்த்தரால் வழக்காடப்படும் ஒரு செயல்முறையில் காணப்படுகின்றது.*

*இப்போது நாம்* ***எரேமியா 30:10-17*** *வரையிலான வசனங்களை வாசிக்கலாம்:* ***"ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரயேலே, கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை. உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடியதாயும் இருக்கிறது. உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களும் இல்லை. உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள்; அவர்கள் உன்னைத் தேடார்கள்; திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், உன் பாவங்கள் பலத்துப்போனதினிமித்தமும், சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் நான் உன்னைத்***

***தண்டித்தேன். உன் நொறுங்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்? திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன். ஆதலால் உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள்; உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப்போவார்கள்; உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்; உன்னைக்-கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன். அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளூண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."***

*பிரியமான சகோதர சகோதரிகளே, இஸ்ரயேலர் தங்கள் சொந்த தேசத்திற்கே திரும்பக் கொண்டுவரப்பட்ட பிறகும், பலரும் சரியான விசுவாசம் இல்லாமல் காணப்படுவார்கள் என்பதையும், இந்த மேற்கத்திய சக்திகள் பக்கமாகவும், தங்களுடைய சுய புத்தியின் மீதும் சாய்ந்திருப்பார்கள் என்பதையும், இன்னும் அவர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை உறவிற்குள்ளக இருக்கின்றபடியால், அவர்களின் அக்கிரமத்தினிமித்தம் அவர் அவர்களைத் தண்டிக்க வேண்டியிருக்கும் என்பதையும் கர்த்தர் முன்னறிவார் என்பதை மேலுள்ள வசனப்பகுதி நமக்குக் காட்டுகின்றது.*

*மேலும்,* ***எசேக்கியேல் 20:33-39 வரையிலான*** *வசனப்பகுதியில் உள்ளது போல, இந்தத் தண்டனைகளின் மூலமாகவே அவர் அவர்களோடே வழக்காடி, அவர்கள் மத்தியிலிருந்து* ***கலகக்காரரை*** *எடுத்துப் போடுகிறார் – இது ஒரு செயல்முறையாகும் (process). இறுதியாக எதிர்காலத்தில்,* ***எசேக்கியேல் 38 மற்றும் 39****ல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, கோகின் படையெடுப்போடு இந்தச் செயல்முறையானது நிறைவுபெறும் என்று நாங்கள் நினைக்கிறோம். இருப்பினும், இஸ்ரயேலை முற்றிலுமாக அழிக்க தேவன் அனுமதிக்க மாட்டார் என்பதையும் இது காட்டுகிறது. அவர்களுக்குத் தண்டனை உறுதி, ஆனாலும் தேவன் அவர்களின் காயங்களை ஆற்றிடுவார் என்று*

*வேதவாக்கியம் நமக்குத் தெரிவிக்கின்றது.*

*இஸ்ரயேலின் மனக்கடினம் எப்போது நீக்கப்படும்?* ***உரோமர் 11:25-27*** *வரையிலான வசனப்பகுதி பின்வருமாறு நமக்குத் தெரிவிக்கின்றது:* ***"மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம்*** *(இதற்கு பின்பு)* ***இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது."*** *ஆம், தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவே இந்த மீட்கிறவரும், மாபெரும் மத்தியஸ்தரும் ஆவார்; மேலும் அந்த உடன்படிக்கை புதிய உடன்படிக்கையாக இருக்கும், இது பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக, நடைமுறையில் இருக்கும்; அப்போது அவர்களின் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும், ஆதாமின் பாவம் நிவர்த்தியாக்கப்படும், இயேசு தமது மீட்கும் பொருளை ஒரே தரமாக மற்றும் எல்லோருக்குமாக செலுத்தியிருப்பார்; அப்போது அவரவருக்கான பயன்தரும் வாய்ப்பு அவரவருக்குக் கிடைக்கும்.*

***உரோமர் 11****ல் மிகவும் விலையேறப்பெற்ற வசனப்பகுதி ஒன்று உள்ளது –* ***உரோமர் 11:32,33- "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே*** *(அவநம்பிக்கைக்குள்ளே – unbelief)* ***அடைத்துப்போட்டார். ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!"*** *அவர்கள் சாத்தானால் குருடாக்கப்பட்டதை தேவன் அறிவார், அதனால் அவர்கள் எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன்*

*எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே (அவநம்பிக்கைக்குள்ளே – unbelief) அடைத்துப்போட்டார். ஆம் இப்பேர்ப்பட்ட தேவனையே நாம் நம்முடைய தேவனாகப் பெற்றிருக்கிறோம்.*

*ஆக, எப்போது அவர்களுடைய மனக்கடினம் நீங்கும்? நாம் சற்றுமுன் வாசித்தப் பிரகாரம், சபை முழுமையடையும் போது, அவர்களது மனக்கடினமும் நீக்கப்படும். **சகரியா 12:10**ம் வசனமானது, கர்த்தர் இஸ்ரயேலுக்காக பூர்வ யுத்தநாளிலே போரிட்டதுபோல, வரும் நாட்களில் அந்த ஜாதிகளோடே போராடி, அவர்களை விடுவித்த பிறகு **(சகரியா 14:1-3)**, அவர்கள்மேல் விண்ணப்பங்களின் ஆவியை ஊற்றுவார் என்றும், அப்போது அவர்கள் தாங்கள் குத்தினவரை அடையாளம் கண்டுகொள்வார்கள் என்றும், உண்மையில் இயேசுவே தங்கள் மேசியா என்பதை அடையாளம் கண்டுகொள்வார்கள் என்றும், தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல அவருக்காகப் புலம்புவார்கள் என்றும் நமக்குச் சொல்கிறது.*

***"உன்னை** (இஸ்ரயேலை) **ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச்** (இஸ்ரயேலை) **சபிக்கிறவனைச் சபிப்பேன்" – ஆதியாகமம் 12:3,** இது ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதியாகும்.*

## *ஆம்!* **இஸ்ரயேலின் எதிரிகள் தேவனின் எதிரிகள்.**

***சங்கீதம் 83:1-4** (ஆங்கிலத்தில் – NIV):* **"தேவனே, மவுனமாயிராதேயும், பேசாமலிராதேயும்; தேவனே, சும்மாயிராதேயும். இதோ, உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள். உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு ('நீர் நேசிக்கும் ஜனங்களுக்கு' – *TAERV)* விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள். அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரயேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்."**

***சங்கீதம் 83ல்*** *உள்ளதுபோல, அந்த யுத்தம் நடக்கும்போது, இஸ்ரயேலுக்கு தேவனுடைய வல்லமையினால் வெற்றி கொடுக்கப்படும் என்பதை நாம் அறிவோம். இஸ்ரயேலின் எதிரிகள் தேவனின் எதிரிகள் என்றே அவருடைய வார்த்தை கூறுகிறது.*

## தேவனுடைய (சிருஷ்டிகரின்) பார்வையில் மனுக்குலத்தின் நிலைமை:

- ***தீமையின் அனுமதி:***

  ***பிரசங்கி 1:13*** *(ஆங்கிலத்தில் – Ferrar Fenton Bible; தமிழில் – இங்கே அதற்கேற்றார் போல் மொழிபெயர்த்து கொடுக்கப்பட்டுள்ளது) :* ***"வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம்பண்ணினேன் – தேவன் ஆதாமின் பிள்ளைகள்மேல் சுமத்தினவை கடுமையான பயிற்சிகளாகும்."*** *மேலும் ஒரு வசனம்,* ***பிரசங்கி 3:10: "ஆதாமின் பிள்ளைகள் தங்களை வளர்த்திக் கொள்வதற்காக தேவன் நியமித்துள்ள பிரயாசங்களை நான் ஆராய்ந்தேன்."***

- ***குற்றவாளிகள்:***

  *ஆதாமின் பாவத்தின் காரணமாக, முழு மனுக்குலம் 'குற்றவாளிகளாக' ('Convicts') இருக்கிறார்கள் – இது ஆங்கில ஆறாம் தொகுதி, பக்கம் 174 மற்றும் 175ல், சகோதரர் ரசல் அவர்கள் பயன்படுத்தும் ஒரு பதமாகும். ஆதாமுக்குள்ளான அனைவரும் மரித்துக்கொண்டிருக்கும் சந்ததியாக, "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாக," "கோபாக்கினையின் பிள்ளைகளாக," "குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாக" (திருவிவிலிய சொற்றொடர்) இருக்கிறார்கள்.* ***உரோமர் 5 : 1 2 – "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"*** *நாம் அனைவரும்*

*தகப்பன் ஆதாமினால் மரண ஆக்கினைக்குள்ளாகி பாவிகளானபடியால், நாம் அனைவரும் தேவனுடைய பார்வையில் குற்றவாளிகளாக இருக்கிறோம் என்று சுருக்கமாக சகோ. ரசல் அவர்கள் கூறுகிறார். நாம் பார்த்தபடி, கர்த்தர் சிலரை நன்மைக்காகவும், சிலரை வேறு மாதிரியாகவும் கையாள்கிறார், அதற்கு அவருக்கு உரிமை உள்ளது. இஸ்ரயேலரைப் பொறுத்தவரையிலோ, அவர் அவர்களுடன் ஓர் உடன்படிக்கை உறவிற்குள்ளாக இருக்கிறார். சொல்லப்போனால், இந்த ஜனம் மாத்திரமே, புதிய சிருஷ்டி உடன்படிக்கைக்கு வெளியே, அவருடைய உச்சபட்ச கவனத்தைப் பெற்றிருக்கும் ஒரே ஜனமாக இருக்கிறார்கள்.*

*நாம் பார்த்த கருத்துகளைச் சுருக்கமாக சொல்லவேண்டுமானால்: கிருபையாக, ஆதாமுக்கும்சரி – இஸ்ரயேலின் எதிரிகள், புதிய சிருஷ்டியின் எதிரிகள் உட்பட – ஆதாமின் முழு சந்ததியாருக்கும்சரி, தேவன் ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சுவிசேஷ யுக வேலை முடிந்ததும், வருங்காலத்தில் உலகத்திற்கு இந்த ஆசீர்வாதங்கள் கடந்துவரும்.*

*பல தலைவர்கள் உட்பட உலகில் உள்ள பலரும், நல்நோக்கமுள்ளவர்களாய் – நல்லெண்ணம் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். இருப்பினும் உண்மையில், அவர்கள் குருடாக்கப்பட்டவர்களாய், சொல்லப்போனால், பெரும்பாலும் மூளைச்சலவை செய்யப்பட்டவர்களாய், தேவனுடைய திட்டங்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த அறுவடைக் காலம் முழுவதிலும் நாம் பெரும் யுக மாற்றக் காலத்தில் இருந்து வருகிறோம் என்பதையும், அது இன்னும் தொடர்கிறது என்பதையும் நினைவில் வையுங்கள். கிறிஸ்து, கண்டிப்பான நீதி எனும் இரும்புக் கோலைக் கொண்டு ஆளுகை செய்யும் வரையில், இன்றைய பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் ஒருநாளும் கிடைக்காது என்பதையும் நினைவில் வையுங்கள்.*

## *பரிசுத்த மீதியானவர்கள் (THE HOLY REMNANT):*

இவர்கள் பெற்றிருக்கும் ஆவியைப் (மனநிலையைப்) பற்றி, **ஏசாயா 25:9**ல் சொல்லப்பட்டுள்ளது: **"இவரே அவர்களுடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தார்கள்."** இந்தப் பரிசுத்த மீதியானவர்கள், தேவன் மீது உண்மையான விசுவாசம் வைத்துள்ள யூதர்கள் ஆவார்கள். சகோதரர் ரசல் அவர்கள், சில சமயங்களில், மரபுவழி யூதர்களை (*Orthodox Jews*) பற்றி சொல்லும்போது: இவர்களுக்கே இயேசு தம்மை அவர்களுடைய மேசியாவாக முதலில் வெளிப்படுத்துவார் என்றும், இவர்களே முற்பிதாக்களுடன்கூட இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தின் மையக்கருவாக கர்த்தர் பயன்படுத்தப்போகிற அந்த மீதியான ஜனமாக இருப்பார்கள் என்றும் எழுதியுள்ளார். பின்வரும் அவரது வாக்கியங்கள் திருப்திகரமாக உள்ளன:

> ***C250 (ஆங்கில மூன்றாம் தொகுதி):*** *"ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு, தெய்வீக வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்துள்ள யூதர்களே, ஆபிரகாமின் பிள்ளைகளென தேவனால் அங்கீகரிக்கப்-படுகின்றார்கள்."*

***கேள்வி புத்தகம் 379:***
*"...பழைய ஏற்பாட்டுப் பாத்திரவான்களாகிய முற்பிதாக்கள், யூதர்கள் மத்தியில் தோன்றுவார்கள், ஆனால் விசுவாசமில்லாத யூதர்கள் மத்தியில் அல்ல, ஏனென்றால், தங்கள் மேசியாவுக்காக ஏங்கிக் காத்திருக்கிற சில உண்மையான*



*ஊக்கமுள்ள யூதர்கள் இருக்கவே செய்கிறார்கள்; மேலும் அம்மாதிரியான யூதர்களுக்கே அவர் தம்மை வெளிப்படுத்துவார் என்றும், அவ்வாறு தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தும்போது அவர்களும் அவரை நம்புவார்கள் என்றும் நான் கருதுகிறேன்."*

*மேசியானிய யூதர்கள் அல்லது இயேசுவுக்கான யூதர்கள் (Messianic Jews or Jews for Jesus) எனும் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்தப் பரிசுத்த மீதியானவர்களாக இருப்பார்களா என்று என்னிடம் சிலர், சில சமயங்களில், கேட்கிறார்கள். நான் அவ்வாறு நினைக்கவில்லை என்பதே எனது பதிலாகும். அதற்கான என்னுடைய எளிய நியாயமான காரணம் என்னவென்றால்: அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறுகின்றனர், ஆனால் பாருங்கள், அவர்கள் பிரதானமாக திரித்துவவாதிகளாக, ஏரிநரக விசுவாசிகளாக இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கையில், அவர்களும் மற்றவர்களைப் போலவே, இன்னொரு சபைப்பிரிவாக இருக்கின்றனர். அப்படியிருக்க, சிலர் திரள்கூட்டமாக இருக்கலாம். கர்த்தர் மட்டுமே அதை அறிவார். ஆனால் நிச்சயமாக, அவர்கள் களைகளாக இருப்பார்கள், எனவே அவர்களை சரியான யூத உறவின் கீழாக வகைப்படுத்த முடியாது, மாறாக அவர்கள் எதிர்காலத்தில் கட்டுகளாகக் கட்டப்படும் களைகளில் ஒரு வகுப்பாராக இருப்பார்கள் என்று சொல்லலாம். … அவர்களுக்கு இராஜ்யத்தில் வாய்ப்பு கிடைக்கும், அவர்கள் கண்கள் திறக்கப்படும், அவர்களின் இந்தத் தப்பறைகள் நீக்கப்படும். அங்கு அவர்களுக்கு அந்த ஆசீர்வாதம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், ஆனால் அது பூமிக்குரிய ஆசீர்வாதமாகவே இருக்கும்.*

***யோயேல்** 2:32ல், பரிசுத்த மீதியானவர்களைப் பற்றி பின்வருமாறு தெரிவிக்கின்றது, "**அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்.**" மீண்டுமாக, **ஏசாயா 4:4ல், "சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில்***

***தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்***" *என்று சொல்லப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக,* ***யோயேல்*** *2:15-20 போன்ற பிற வேத வாக்கியங்களும் இருக்கின்றன.*

## *இன்றைய இஸ்ரயேல் தேசத்திற்கு நமது செய்தி என்னவாக இருக்கும்?*

*முழு தேசத்தோடு பேச நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், பின்வருவதே அவர்களுக்கான நமது சுருக்கமான செய்தியாக இருக்கும்:*

> ***"தேசத்தைப் பற்றிக்கொள்ளுங்கள், இது ஆபிரகாமின் சந்ததியாகிய உங்களுக்கு தேவன் கொடுத்த பரிசாகும். பெயரளவிலான கிறிஸ்தவத்தை நிராகரித்திடுங்கள். தேவனுடைய வார்த்தையாகிய தோராவில் காணப்பட்டபடி, உங்கள் உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளுங்கள். வேதவாக்கியங்களில் காணப்படும் நீதியை உயர்த்திப்பிடியுங்கள். உண்மை நிலவரத்தோடு முரண்படும் போது, மேற்கத்திய சக்திகளின் உலகப்பிரகாரமான அறிவுரைகளையும் அழுத்தங்களையும் நிராகரித்திடுங்கள். உங்கள் மேசியாவை எதிர்நோக்கி இருங்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வையுங்கள்."***

*******

> ***"Hold to the land. It is God's gift to you, the Seed of Abraham. Reject nominal Christianity. Keep your Covenant as found in the Torah – the word of God. Promote righteousness as found in the Scriptures. Resist Western worldly advice and pressure, when it conflicts with the facts***

***on the ground. Look forward to your Messiah. Trust in the promises of God."***

## ***இஸ்ரயேல் சம்பந்தமாக நிறைவேறிவருகின்ற சில சாத்தியமான தீர்க்கதரிசனங்கள்:***

*ஒரு காரியம் நிறைவேறிவருகின்ற செயல்பாட்டில் இருக்கும்போது, அதை அறிவது மிகவும் கடினமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இங்கே கொடுக்கப்-பட்டுள்ளது நிச்சயமாக அனைத்து தீர்க்கதரிசனங்களையும் உள்ளடக்கிய பார்வை அல்ல, மாறாக சிலவற்றை மட்டும் இங்கே தேர்ந்தெடுத்து கொடுத்துள்ளோம்:*

- *முதலாவது, நாம் ஏற்கனவே பார்த்திட்ட, **"என் ஜனத்தோடு பட்சமாய்ப் பேசுங்கள்"** எனும் **ஏசாயா 40:1 & 2** தீர்க்கதரிசனமாகும். உண்மையில், யுகங்கள் பற்றிய தேவனுடைய தெய்வீகத் திட்டத்தை வேத மாணாக்கர் மட்டுமே புரிந்துகொள்ளுகிறார்கள். அப்படியிருக்க, உண்மையில், நம்மால் மட்டும் தான் இஸ்ரயேலுருக்குச் சிறந்த செய்தியை வழங்க முடியும் (அதற்காகத் தேவனைத் துதிக்கிறோம்), மேலும் பல சகோதரர்கள் அந்த வேலையைச் செய்தும் வருகிறார்கள்.*

- *அடுத்து **எரேமியா 16:16**ல் வருகிற தீர்க்கதரிசனமாகும், அதில் வேட்டைக்காரரர் மற்றும் மீன்பிடிக்கிறவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அக்டோபர் எம் தேதி துவக்கி உலக அளவில் யூதருக்கு எதிரான விரோதம் (anti-semitism) வியத்தகு அளவில் அதிகரித்து வருகிறது – இம்மாதிரியான சூழ்நிலை, யூதர்கள் தங்களது பிதாக்களின் தேசமாகிய இஸ்ரயேலுக்கே திரும்பும்படிக்கு ("அலியா / Aliyah") அவர்களை நிர்ப்பந்திக்கிறது – இப்படியாக தீர்க்கதரிசனத்தின் "வேட்டைக்கார" அம்சமானது நிறைவேறிவருகிறது. அடுத்து, இந்த "மீன்பிடிக்கிறவர்கள்" யாரென்றால், (உலகெங்கும் இருக்கிற) யூத மக்களை, தங்களுடைய*

*பிதாக்களின் தேசத்திற்குத் திரும்பி வருமாறு தொடர்ந்து அழைப்பு விடுக்கின்ற யூத மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜனங்கள் ஆவார்கள், மேலும் அப்படி புதிதாக தேசத்திற்குள் வருபவர்களுக்கான சூழலை உருவாக்க, தேசத்திற்குள் இருக்கும் இந்த ஜனம் மாபெரும் தியாகத்தைச் செய்கிறவர்களாய் (இருந்தார்கள், இருக்கிறார்கள் மற்றும்) இருப்பார்கள்.*

- *அடுத்து* ***சங்கீதம் 83****ல் வருகிற தீர்க்கதரிசனமாகும், இருப்பினும், இந்தத் தற்போதைய நிகழ்வுகள் எல்லாம் சேர்ந்தே இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம், இந்தத் தற்போதைய மோதலானது நாம் இதுவரை பார்த்திராத ஒரு மாபெரிய மோதலாக உருவெடுக்க வேண்டியிருக்கிறது.*

- *அடுத்து,* ***சகரியா 12:3-10****ல் வருகிற தீர்க்கதரிசனமாகும், இங்கே இன்னும் விரிவாகக் கருத்தில் கொள்வதற்கு நிறைய காரியங்கள் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம்.*

  *எனவே* ***சகரியா 12:3 & 4*** *வசனங்களை முதலில் வாசிக்கலாம்: "****அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள். அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களுக்கெல்லாம் புத்திமயக்கத்தையும் வரப்பண்ணி, யூதாவம்சத்தின்மேல் என் கண்களைத் திறந்துவைத்து, ஜனங்களுடைய எல்லாக் குதிரைகளுக்கும் குருட்டாட்டத்தை உண்டுபண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.****" கி.பி. 1878ம் வருஷம் துவக்கி, மனிதனால் உருவாக்கப்பட்ட போதனைகளை, உபதேசங்களை அடையாளப்படுத்திடும் "குதிரைகள்" திகைப்பும் குழப்பமுமடைந்து வருகின்றன, ஏனென்றால் வரலாற்றில் இதுவரை நடந்த எதற்கும் முரணாக, இஸ்ரயேல் கிட்டத்தட்ட 2000 வருஷங்களுக்குப் பிறகு தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பியுள்ளார்கள்.*

*வ. 5 :* **“எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத்திலே சொல்லுவார்கள்.”** *இந்த “***யூதாவின் தலைவர்***” மதச்சார்பற்ற தலைவர்கள் (“secular leaders”) ஆவார்கள்; “***எருசலேமின் குடிகளால்***” அடையாளப்-படுத்தப்படுகிற விசுவாசமுள்ள யூதர்களுடைய தேவன் தங்களுக்குப் பெலனாக இருப்பார் என்று தங்கள் இருதயத்திற்குள்ளாக இந்த “யூதாவின் தலைவர்” உண்மையில் சிந்திக்கிறவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். ... இந்த விசுவாசமுள்ள யூதர்களாகிய “***எருசலேமின் குடிகளின்***” விசுவாசத்தின் காரணமாக, மதச்சார்பற்ற யூதத் தலைவர்கள் தாயகத்தை நிறுவுவதற்கும், தாயகத்தைப் தக்கவைத்துக்-கொள்ளுவதற்குமாக ஏறெடுக்கின்ற முயற்சிகளை, தேவன் மேற்பார்வையிட்டு ஆசீர்வதிப்பதற்கு ஏதுவுண்டாக்கிடும்.*

*வ. 6:* **“அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன்; அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள்; எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்.”** *எனவே, இங்கு சகோதரர்கள் கடந்த காலத்தில் வெளிப்படுத்திய சிந்தனை என்னவென்றால் – 1967 போரின் மூலமாக, எருசலேம் ஒரு நகரமாக, மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டது, மதச்சார்பற்ற தலைவர்களாகிய “***யூதாவின் தலைவர்களே***” பெரும்பாலும் இராணுவத்தில் இயங்கி வந்தனர், அவர்களே இஸ்ரயேல் பெற்ற பல்வேறு வெற்றிகளை மேற்பார்வையிட்டவர்கள், அவர்களே அதில் வந்த பெரிய பெரிய சிரமங்களைச் சமாளித்தவர்கள், இப்படியாக எருசலேம் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டது.*

*வ. 7 :* **“தாவீது வம்சத்தாரின் மகிமையும், எருசலேமின்**

***குடிகளுடைய மகிமையும், யூதாவின்மேல் தன்னை உயர்த்தாதபடிக்கு, கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல்முதல் இரட்சிப்பார்.”*** *(கிங் ஜேம்ஸ் '**இரட்சிப்பார்**' என்று சொல்கிறது, ஆனால் RSV 'வெற்றி கொடுப்பார்' என்று சொல்கிறது). இங்கு வரும் ''**யூதாவின் கூடாரங்கள்**'' ஒரு தற்காலிக நிலையை / ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது; அதாவது, இந்த மதச்சார்பற்ற யூதர்கள் இஸ்ரயேலைக் கைப்பற்றி, இஸ்ரயேலை ஒரு தேசமாக நிலைநிறுத்துவதில், இராணுவ ரீதியாக வெற்றிகள் பல பெற்றாலும், அது தற்காலிகமானதே என்பதைக் காட்டுகின்றது. ஆனால், ''**தாவீது வீட்டாரின் மகிமை**'' (TCV) என்று வந்துள்ளது – இதில் வரும் ''வீடு'' என்பதும், ''**எருசலேமின் குடிகள்**'' என்பதும் ஒரு நிரந்தர குடியிருப்பைக் குறிக்கின்றது; ''**தாவீது வீட்டார்**'' என்பதும் விசுவாசமுள்ள யூதர்களைக் குறிக்கின்றது. ஆக, ''**தாவீதின் வீட்டார்** எனும் விசுவாசமுள்ள யூதர்கள்'' மற்றும் ''**எருசலேமின் குடிகள்** எனும் விசுவாசமுள்ள யூதர்கள்'' என்பவர்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால், எப்படி தாவீது ஒரு தலைசிறந்த தலைவராக இருந்தாரோ, அதுபோல, அந்தப் பரிசுத்த மீதியானவர்கள் மத்தியில் மிகவும் தலைசிறந்த விசுவாசமுள்ள தலைவர்களும் (leaders of outstanding Faith) காணப்படுவார்கள் என்பதாகும். மேலும் இவர்களே, கோகு படையெடுத்து வருகிற அந்தக் காரிருளான வேளையிலும்கூட, விசுவாசமுள்ள மற்றவர்களை நோக்கி, திடமனதாயிருக்கும்படிக்கு ஊக்குவிப்பார்கள்.*

***வ. 8 : “அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்; அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல** (ஒரு விசுவாசத் தலைவர்) **இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும்** (அதாவது, விசுவாசத்தில் வலிமைமிக்க ஒருவனைப்போலும், இங்குள்ள தேவன் என்ற பதத்திற்கு வலிமைமிக்க ஒருவன் என்பது பொருள்) **கர்த்தருடைய தூதனைப்போலும் (**தூதுவரைப்போலும்**) இருப்பார்கள்.**'' எனவே, கோகு படையெடுப்பின் இந்தப் பயங்கரமான*

*சிரமங்களை எதிர்கொள்ளும்போது, அளப்பரிய விசுவாசத்தோடு காணப்படும் இந்த வலிமைமிக்கவர்கள், அந்த உண்மையுள்ள மீதியானவர்களுக்குத் தலைவர்களாக இருப்பார்கள்.*

***வ. 9 & 10 : "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன். நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல அவருக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."*** *எனவே, "**விண்ணப்பங்களின் ஆவியானது**" "**யூதாவின் தலைவர்**" மீதோ "**யூதாவின் கூடாரங்கள்**" மீதோ ஊற்றப்படுவதில்லை என்பதாகக் காண்கிறோம். ஏனெனில், தேசத்தை நிறுவி, (தக்கவைத்துக்கொள்வதோடு) மதச்சார்பற்ற யூதருக்கான பங்கு முடிவடைந்திருக்கும். இருப்பினும், உண்மையான விசுவாசமுள்ள யூதர்கள் மட்டுமே, இயேசுதான் உண்மையான மேசியா எனும் (மனப்பூர்வமான) புரிதலைப் பெற்றுக்கொள்ளும் முதல் யூத வகுப்பாராக, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.*

- *கடைசியாக,* ***செப்பனியா*** *2 ம் அதிகாரத்தில் வருகிற தீர்க்கதரிசனமாகும், இந்த நடப்பு நிகழ்வில் இதற்கும் ஓர் இடம் இருக்கிறது.* ***செப்பனியா 2:4-10*** *(ஆங்கிலத்தில் – NIV):* ***"காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்; அஸ்தோத்தைப் பட்டப்பகலிலே பறக்கடிப்பார்கள்; எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும். சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு பெலிஸ்தரின் தேசமாகிய கானானே, கர்த்தருடைய வார்த்தை உனக்கு விரோதமாயிருக்கிறது; இனி உன்னில் குடியில்லாதபடிக்கு உன்னை அழிப்பேன். சமுத்திரக்கரை***

***தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத்தொழுவங்களுமாகும். அந்த தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வம்சமாகும்; அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்; அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக்கொள்வார்கள்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார். மோவாப் செய்த நிந்தனையையும், அம்மோன் புத்திரர் என் ஜனத்தை நிந்தித்து, அவர்கள் எல்லையைக் கடந்துபெருமை பாராட்டிச் சொன்ன தூஷணங்களையும் கேட்டேன். ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப் போலுமாக, காஞ்சொறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். அவர்கள் சேனைகளுடைய கர்த்தரின் ஜனத்துக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டி அவர்களை நிந்தித்தபடியினால், இது அவர்கள் அகங்காரத்துக்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைக்கும்."*** *காஸா யூதாவுக்கானது – யூத மக்களுக்கானது என்று கர்த்தர் தெளிவாகக் கூறுகிறார். இராஜ்யத்தில் எஞ்சிய மனுக்குலத்தோடுகூட காஸா மக்களுக்கும் ஆசீர்வாதங்கள் கிடைக்கும். எதிர்காலத்தில் பரிசுத்த பெரும்பாதையில் அவர்கள் முன்னேறிச்செல்லும்படிக்கு அவர்கள் இப்போது அவ்வளவு சேதமடைய மாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம், விசுவாசிக்கிறோம்.*

## ***யூதருக்கென்று வைக்கப்பட்டுள்ள நோக்கத்தைப் பற்றிய எதிர்கால தீர்க்கதரிசனங்கள்:***

*ஆபிரகாமின் மாம்சீக சந்ததியுடன் தேவன் ஏற்படுத்திய யூத நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும், நாம் அழைக்கப்-பட்டுள்ள கிறிஸ்த உடன்படிக்கைக்கும் இடையே வேறுபாடு*

*இருப்பதை நாங்கள் ஏற்கனவே விளக்கியுள்ளோம் – சுவிசேஷ யுகமானது புதிய உடன்படிக்கைக்கு தேவையான மத்தியஸ்தருடைய சரீர அங்கங்களைச் கூட்டிச்சேர்த்து, ஆயத்தப்படுத்தும் தன்னுடைய வேலை முடித்த பிறகு, வருங்காலத்தில் இஸ்ரயேலோடும், யூதாவோடும் செய்யப்படப்போகிற புதிய உடன்படிக்கை செயல்பாட்டில் இருக்கும் போது நியாயப்பிரமாண உடன்படிக்கை முற்றிலுமாக கடந்துபோயிருக்கும். உலக மனுக்குலம் இந்தக் கிறிஸ்தவ உடன்படிக்கையின் கீழாக அழைக்கப்படப் போவதில்லை. அவர்கள் இயேசுவை மேசியாவாக, அவர்களின் மீட்பராக அடையாளம் காண அழைக்கப்படுவார்கள் என்பது உண்மைதான் என்றாலும், பலியினால் உடன்படிக்கை செய்துகொண்டு கிறிஸ்துவின் பின்னடியாராக இருப்பதற்கான வாய்ப்பின் கதவானது, 1,44,000 பேர்கொண்ட சபை நிறைவடைந்தவுடனே, மூடப்பட்டுவிடும்.*

***எசேக்கியேல்** 36ம் அதிகாரத்தில் காட்டப்பட்டுள்ளபடி, அவர்கள் சீரமைக்கப்பட்டவுடனே, அவர்களின் இருதயங்களும் சிந்தைகளும் தேவனுக்கு நேராய் சரியாக கொண்டுவரப்-பட்டவுடனே, இஸ்ரயேல் தேசம் மற்றவர்களை ஆசீர்வதிக்கும் ஒரு தேசமாக மாறும்.*

*ஆம், அதற்கான தீர்க்கதரிசனம் **சகரியா 8** ல் காணப்படுகிறது, **சகரியா 8-20-23: "இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில்போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்து போவோம் வாருங்கள்; நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்: ஆகையால்***

**உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."**

*அப்போது யூதர்கள், அதாவது, சீரமைக்கப்பட்ட உண்மையும் விசுவாசமுமுள்ள யூதர்கள், இப்படியாக தங்களைத் தாழ்த்தி, அவர்களுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு வரும் மனத்தாழ்மையுள்ள உலக ஜனங்களை, தேவனுடைய வழிகளை அறிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் ஏதுவாக, சந்தோஷத்தோடே வழிநடத்தி செல்வார்கள். இதுவே அவர்களுக்கென்று வைக்கப்பட்டுள்ள மகத்தான தெய்வீக நோக்கமாகும்.*

## இராஜ்யத்தின் மத்தியஸ்தப் பாகத்தின்போது தேவனுடைய ஆவி ஊற்றப்படும்:

*முதலில், அது அந்தப் பரிசுத்த மீதியானவர்கள் மீது ஊற்றப்படும். இது குறித்து* ***சகரியா 12:10****ல் வாசிக்கிறோம். ஆம், அந்தச் சிறிய எண்ணிக்கையினர் மீது ஊற்றப்படும், அதாவது, கோகின் படையிடமிருந்து தேவன் அவர்களை விடுவிக்கும் சமயத்தில், அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டு-கொள்ளத்தக்கதாக, அந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்-கொள்வார்கள் என்று வாசிக்கிறோம்.*

*மாகோகின் படை தோற்கடிக்கப்பட்ட பிற்பாடு, (இப்படிப்பட்ட சிட்சை வாங்கின பிற்பாடு) இஸ்ரயேல் தேசமும் அந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும், இதுகுறித்து* ***எசேக்கியேல் 39:29****ல் பின்வருமாறு வாசிக்கிறோம்:* ***"நான் இஸ்ரயேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."*** *ஆம், பரிசுத்த மீதியானவர்களோடு ஒப்பிடும்போது இது இன்னும் பெரிய ஓர் எண்ணிக்கையாக இருக்கின்றது. அவர்கள் நம்பி, புதிய உடன்படிக்கை உறவின் கீழாக வர, அது இஸ்ரயேல் தேசத்தின் மீது ஊற்றப்பட்டிருக்கும்.*

*ஆனால் மற்றுமொரு ஊற்றப்படுதல் இருப்பதாக பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்:* ***யோயேல் 2:28 - "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்."*** *"**மாம்சமான யாவர்மேலும்**" இது இன்னும் பெரியளவிலான ஓர் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.*

*இப்படியாக மூன்று தடவை ஆவி ஊற்றப்படுமென்று பதிவு செய்யப்பட்டுள்ளது:*

- *முதலாவதாக, சிறிய எண்ணிக்கையாகிய பரிசுத்த மீதியானவர்கள் மீது,*

- *இரண்டாவதாக, இஸ்ரயேல் தேசம் தேவனை நம்பி, புதிய உடன்படிக்கை உறவின் கீழாக வருகின்றபடியால், அடுத்து அவர்கள் மீது ஊற்றப்படும்,*

- *மூன்றாவதாக, முழு மனுக்குலமும் புதிய யூத உடன்படிக்கைக்குள் நுழையும்போது, அவர்கள் மீதும் தேவ ஆவி ஊற்றப்படும், அதாவது, யூதா வம்சத்தாரோடும், இஸ்ரயேல் வம்சத்தாரோடும், புதிய உடன்படிக்கையானது ஏற்படுத்தப்படும். அப்போது உலக மனுக்குலம் அதற்குத் தங்களைக் கீழ்ப்படுத்துவார்கள், அப்போது அவர்களும் கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்வார்கள்.*

*இந்த வருங்கால ஊற்றப்படுதலானது, சுவிசேஷ யுகத்தின்போது, பரிசுத்த ஆவி மும்முறை ஊற்றப்பட்டதோடுகூட எவ்வளவு அழகாக ஒத்துப்போகின்றதாய் இருக்கின்றது. அது ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலுக்காகக் கொடுக்கப்பட்டதாக இருந்தாலும், அது தேவனுடைய ஆவியைப் பெற்றுக்-கொள்வதோடு தொடர்புடையதாக இருக்கின்றது.*

- *முதலாவதாக, இயேசு தம்முடைய ౩௦ம் வயதினில்*

*ஞானஸ்நானம் பெற்று, முதல் புதிய சிருஷ்டியானபோது, அவர் அந்தப் பரிசுத்த ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார்,*

- *இரண்டாவதாக, மேல் வீட்டறையில் இருந்த சிறிய எண்ணிக்கையிலான சீஷர்கள் அந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர்.*
- *மூன்றாவது மற்றும் இறுதியாக, கொர்நேலியு மற்றும் அவரது குடும்பத்தினர் அந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர் – இது மற்ற அனைத்து புறஜாதியாரும் ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாக வழிவகை செய்தது.*

*எனவே, ஒரு வகையில், இந்த இருவகையான ஆவியின் ஊற்றப்படுதலுக்கு இடையே ஒரு மாதிரி (Pattern) பின்பற்றப்படுவதாக நாங்கள் கருதுகிறோம்.*

## முடிவுரை

*இறுதியாக,* ***ஏசாயா 2:2-5****ல் கொடுக்கப்பட்டுள்ள இந்த நம்பிக்கையோடு இந்த உரையை முடித்துக்கொள்கிறோம்:* ***"கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயம் தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்குவிரோதமாய் ஜாதி பட்டயம்***

***எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. யாக்கோபின் வம்சத்தாரே, கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்."***

*கர்த்தர் தமது ஆசீர்வாதத்தை வர்த்திக்கப்பண்ணுவாராக!*

***ஆமென்!***

BIBLE STUDENTS

Food for New Creature